Koviloor Digital Library

3-3

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

உ

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ லக்ஷ ஹோம நினைவு மலர்

(17—5—1970)

★

எழுதியவர் :

ஸ்காந்த கேஸரீ, பண்டித ப்ரவா, பாரதபாஸ்கர தேவீ பாகவத ப்ரவசனதுரீண, நியாய-மீமாம்ஸா சிரோமணி

திருவெண்காடு

ஸ்ரீ T. K. முத்துஸ்வாமி சாஸ்திரி



திருச்சிராப்பள்ளி செயின் பிரிண்டர்ஸார் அன்பளிப்பு.

★

வெளியீடு :

ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

...ரி நகர் :: புதுக்கோட்டை

...வனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி
ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

KOVILOOR MADALAYAM மடாலயம்

A·NO: 4200
Q25

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-3

உ

वर पाशांकुशाभीति लसद्बाहुचतुष्टयां ।
नवसालपुरावासां नमामि भुवनेश्वरीम् ॥

வர பாசாங்குசாபீதி லஸத்பாஹுசதுஷ்டயாம் ।
நவஸாலபுராவாஸாம் நமாமி புவனேச்வரீம் ॥



4800
Q25

வரம் பாசம் அங்குசம் அபயம் இவை திகழும் நான்கு திருக்கரங்கள் கொண்டவளும் புதுக்கோட்டையில் வீற்றிருப்பவளுமான ஸ்ரீ புவனேச்வரியை வணங்குகிறேன்.

Koviloor Digital Library

ईशस्येच्छा कुण्डली ह्रींस्वरूपा
सर्वान्तस्स्था चिन्त्यते यैः सदैव ।
लोकोद्धारासक्तचित्तान्गुरूंस्तान्
वन्दे शान्तानन्दनाम्नो यतीन्द्रान् ॥

ஈசஸ்யேச்சா குண்டலீ ஹ்ரீம்ஸ்வருபா
ஸர்வாந்தஸ்ஸ்தா சிந்த்யதே யை: ஸதைவ ।
லோகோத்தாராஸக்தசித்தான்குரூம்ஸ்தான்
வந்தே சாந்தானந்தநாம்னோ யதீந்த்ரான் ॥



ஈசனின் இச்சையாகியவளும் குண்டலீ ரூபிணியும் ஹ்ரீங்கார ரூபிணியும் எல்லாப் பொருள்களிலும் உள்ளே விளங்குகின்றவளுமாகி புவனேச்வரீயை எப்போதும் சிந்திப்பவரும் உலகத்தை நல்வழிப்படுத்த ஆசைகொண்டவரும் சந்யாஸிகளில் சிறந்தவருமான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளை வணங்குகின்றேன்.

Koviloor Digital Library

3-3

உ

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ

புதுக்கோட்டையில் புவனேச்வரீ

பக்தர்களும் முக்தர்களும் தங்கிய பெருமை பெற்ற புண்ணியபூமி புதுக்கோட்டை. நேர்மையுள்ளம் படைத்த நல்லவர்கள் வாழ்வதைக் குறிப்பது போன்று நேராகக் காட்சியளிக்கின்றன இவ்வூரிலுள்ள வீதிகள். அதன் வட புறத்தில் ஆஸ்திகர்களை வா வா வென்று அழைப்பது போன்று மங்கள ஒலியும் மந்திர ஒலியும் பெருக்கி செவிக்கு விருந்தளித்துக் கொண்டு கண்களையும் மனத்தையும் கவர்ந்து நிற்கின்றது ஸ்ரீ புவனேச்வரீ ஜகன்மாதாவின் ஸாந்நித்தியத்தோடு ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்த்ர ஸரஸ்வத்ய வதூத ஸ்வாமிகளின் பவித்ரமான அதிஷ்டானம்.

இங்கு

उद्यदिनद्युतिमिन्दुकिरीटां
तुंगकुचां नयनत्रययुक्तां ।
स्मेरमुखीं वरदांकुशपाशा
भीतिकरां प्रभजे भुवनेशीम् ॥ என்றபடி

உதிக்கும் சூரியனின் ஒளி, சந்த்ரகலை பொலிவுறும் திருமுடி, நிமிர்ந்த ஸ்தனபாரம், கருணை பொழியும் மூன்று கண்கள், புன்சிரிப்புத் தவழும் முகமண்டலம், வரம் அபயம் பாசம் அங்குசம் திகழும் திருக்கரங்கள் இவை மின்ன ஜகன்மாதா ஸ்ரீ புவனேச்வரீ தேவீ பக்தர்களுக்கு அருள் வழங்கிக்கொண்டிருக்கின்றாள்.

ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்

இந்த புவனேசுவரீ தேவியை உலகம் உய்ய இங்கு பிரதிஷ்டை செய்த மஹானுபாவர் *ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள்* ஆவார். இவர் அவதூதர்கள் பரம்பரையில்

Koviloor Digital Library

வந்த பாக்யசாலி. தமக்கென வாழாது, பிறர் வாழ தம்மை அர்ப்பணித்த பெரியவர். சாந்தி திகழும் முகம், சடைமலிந்த திருமுடி, காவியுடை தரித்த பொன்னிறத் திருமேனி, தவத்திலே தோய்ந்த மனம், புவனேசுவரீ மந்திரத்தை உருவேற்றுவதிலே உறுதி இவை யெல்லாம் அன்னாரின் அடையாளங்கள். செயற்கரிய தவம் செய்த சித்தர். அவரை பிரத்தியக்ஷ புவனேசுவரீயாய் கண்டு மகிழ்கின்றனர் பக்தர்கள். இம்மஹான் நாடு நலம் பெற இதுவரை பல நற்பணிகள் சிறப்புறச் செய்து முடித்திருக் கினருர். ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஏகதின லக்ஷ நவக்ரஹ ஹோமம், சத சண்டீ ஹோமம், ஸஹஸ்ர சண்டீ ஹோமம், ஸ்ரீ ஸூக்த மஹா கணபதி ஹோமம், கோடி புவனேசுவரீ மூலமந்த்ர தில ஹோமம், கோடி லளிதார்சனே, சுதர்சன ஹோமம், ஸ்ரீ சாந்தி துர்கா சூலினீ லக்ஷ மஹா மந்த்ர ஹோமம் இவைகள் முக்கிய மானவை யாகும். இவ்வாறு பல பணிகள் செய்ய இவருக்கு அருள் புரிந்திருக்கின்ருள் புவனேசுவரீ. இம் முறை ஸ்ரீ மஹா லக்ஷ்மீ லக்ஷ ஹோமத்தை நாம் கண்டு களிக்க வழி செய்துள்ளார். அதன் ஞாபகார்த்தமாக இச் சிறப்பு மலர் "மஹா லக்ஷ்மீ மஹிமை" என்ற நறுமணம் ஏந்தி பக்தர்களின் கைகளுக்கு வருகின்றது. படித்துப் பேறெல்லாம் பெற வேண்டுகின்ரும்.

समस्तसंपत्सुखदां महाश्रियं

समस्त सौभाग्यकरीं महाश्रियं ।

समस्त कल्याणकरीं महाश्रियं

भजाम्यहं ज्ञानकरीं महाश्रियम् ॥

(லக்ஷ்மீ ஹ்ருதயம்)

Koviloor Digital Library

" மஹா லக்ஷ்மீ "

அனந்தகோடி பிரம்மாண்டங்களை ஈன்றெடுத்தவள் ஸ்ரீ புவனேசுவரீ ஜகன்மாதா. இவளைப் பராசக்தி என்றும், மஹா மாயா என்றும், பிரக்ருதி என்றும் தேவீ பாகவதம் அழைக்கும். ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களின் கூட்டமாய் திகழும் மஹா மாயா புவனேசுவரீ தேவியே உலகை ஆக்கும்போது ரஜோ குணங்கொண்டவளாய் ஸரஸ்வதி என்ற பெயர் கொண்டு பிரமதேவனின் சக்தி யாய் திகழுகின்ருள். உலகைக் காக்கும்போது ஸத்துவ குணங்கொண்டவளாய் லக்ஷ்மீ என்று பெயர் பெற்று விஷ்ணுவின் சக்தியாய் விளங்குகின்ருள். உலகை அழிக் கும் போது தாமஸ குணத்துடன் கூடியவளாய் பார்வதீ என்ற பெயர் தாங்கி ஈசுவரனின் சகதியாய் அமைகிருள். ஆதிசங்கர பகவத்பாதர் அவர்கள்

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविद :
हरे : पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयां ।
तुरीयाकापित्वं दुरधिगमनिस्सीम महिमा
महामाये विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥ என்பதனுல் இதை நன்கு விளக்கியுள்ளார்கள்.

ஹ்ரீங்காரம் கூறும் ஆதிசக்தி

இந்த ஸத்வ குணமுள்ள விஷ்ணுவின் சக்தியான மஹாலக்ஷ்மியே

सर्वस्याद्या महालक्ष्मी : वरेण्याशक्तिरुत्तमा (தே. பாகவதம்) என்று முப்பெருஞ் சக்திகளில் முதன்மையான சக்தியாய் கருதப்படுகின்ருள். இந்த மஹாலக்ஷ்மியே மஹிஷா ஸுரனைக் கொல்வதற்காக, தேவர்களின் பிரார்த்தனைக் கிணங்க, சிவன் முதலான முப்பத்து முக்கோடி தேவர் களின் தேஜஸ்களினின்றும் உதயமானுள். பல்வேறு ஆயுங்களும் 18 கரங்களும் கொண்டு சிம்ம வாஹனமேறி

Koviloor Digital Library

மஹிஷனைக் கொன்று உலகங்களுக்கு மகிழ்ச்சியளித்தாள். இவளே ஹ்ரீம் என்ற மஹாமந்த்ரத்தின் பொருளாய் கூறப்பட்டிருக்கின்றாள். இவளுடைய பெருமையை தேவீ பாகவதமும் ஸப்தசதீயும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இந்த மஹாலக்ஷ்மியே பல பிரம்மாண்டங்களிலுள்ள லக்ஷ்மீதேவிகளுக்கெல்லாம் ஸமஷ்டியாய் விளங்குகின்றாள். மந்த்ர சாஸ்திரங்களில் தசமஹாவித்யைகளில் இடம் பெற்றவளாய் உள்ளவளும் இந்த மஹாலக்ஷ்மியே. ஆகவே இந்த மஹாலக்ஷ்மீயின் அம்சமானவர்களே ஒவ்வொரு பிரம்மாண்டத்திலுள்ள விஷ்ணு சக்தியான லக்ஷ்மீக்கள் என்று தெரிகின்றது.

லக்ஷ்மீ கடாக்ஷம்.

உலகைக் காக்கும் தெய்வமான விஷ்ணுவின் மார்பில் உறையும் லக்ஷ்மீ உலக மக்களுக்கு ஸந்தானம், வாஹனம், தனம், தான்யம், ராஜ்யம், ஸௌபாக்யம், வெற்றி இவைகளை தன் திவ்ய கடாக்ஷத்தினால் அளிக்கின்றாள். அவளருளால்தான் தனம் கிடைக்கும். தனம் உள்ளவன் தானும் வாழ்ந்து பிறரும் வாழ உதவுகிறான். தனமுள்ளவனுக்கு புகழ், மக்களிடையே மரியாதை, மனதிற்குகந்த வாழ்வு, அறிவுபெற வசதி, உடலிலே வனப்பு இவை எல்லாம் கிடைக்கின்றன. தர்மம் செய்து புண்ணியம் சம்பாதிப்பதற்கும் இல்லறத்தில் இன்பம் காண்பதற்கும் நியாயமாய் தேடிய பணமே உதவிபுரிகின்றது. குறைகள் பல இருப்பினும் தனம் அவைகளை மறைத்து குணங்காட்டும் சக்தியாய் இருக்கிறது. கற்றோரும் மற்றோரும் தனமுள்ளவனைச்சார்ந்தே வாழவேண்டியிருக்கின்றது.

यस्यार्था : तस्यमित्राणि यस्यार्था : तस्यबान्धवा :

सर्वेगुणा : कांचनमाश्रयन्ति என்ற பழமொழிகள் இதற்குச் சான்றாகும்.

பொருளில்லார்க்கு இவ்வுலகில் இன்பமில்லை, மறுபிறவியில் இன்பமளிக்கும் புண்ணியமும் சேர்வதில்லை.

Koviloor Digital Library

தேவையான கீர்த்தியில்லை. மனித குலத்தின் நடுவில் புகழில்லை, நினைத்த காரியத்தை முடிக்கவும் சக்தியில்லை. நல்லகதி பெறுவதற்கான வழியுமில்லை.

பொருளில்லார்க் கின்பமில்லை புண்ணியமில்லை என்றும்
மருவுறு கீர்த்தியில்லை மாந்தருட் பெருமையில்லை.
கருதிய கருமமில்லை கதிபெறுவழியுமில்லை
பெருநிலத்திடை நடக்கும் பிணமெனப் படுவரன்றே.

என்கிருர் ஒரு கவி.

இந்த லக்ஷ்மீ கடாக்ஷத்திஞல் பெறும் பேறுகளை வேங்கடாத்வரீ என்ற பெரும்புலவர் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்ற நூலில்



शुचौवंशेजन्म श्रुतिनयमतिर्मातरतुला
विकंपासंपत्ति : विशदमविगीता च कविता ।
प्रसक्तिर्दैत्यारौ हितपरमपत्यं शुभयश :
विवर्ता : सप्तामी ध्रुवमसदृशां तावकदृशाम् ॥

"அம்மா! நற்குடிப் பிறப்பும், வேதங்களிலும் தர்க்க சாஸ்திரத்திலும் நுண்ணறிவும், அழியாத ஸம்பத்தும், குற்றமற்ற கவிதையும், விஷ்ணுவினிடத்தில் ஈடுபாடும், அன்புமிக்க தனயனும், நற்கீர்த்தியும் உன் இணையற்ற திருநோக்கின் விளைவுகளே" என்று குறிப்பிட்டிருக்கின்ருர்.

அதே கவி "கடாக்ஷ ஸ்தபகம்" என்ற மற்ருெரு பகுதியில்

क्षमाकुमारि क्षणमीक्षणं ते यदृच्छयान्यस्यासि यत्रजन्तौ ।
सईक्षणानां त्रयमष्टकं वा सहस्तकं वा सहसादधाति ॥
वीक्षितानि तव वारिधिकन्ये यत्र पालितजगन्ति लगन्ति ।
चित्रमत्र स परत्र च देही देहि शब्दमपहायचकास्ति ॥

Koviloor Digital Library

அம்மா! எதிர்பாராதவிதமாக உன் பார்வை எவன்மீது விழுகின்றதோ, அவன் முக்கண்ணனுகவோ, எண் கண்ணனுகவோ, ஆயிரம் கண்கள் உடையவனுகவோ ஆகிவிடுகின்றுன். (அதாவது ருத்ரனுகவோ பிரம்மதேவனுகவோ இந்திரனுகவோ இருக்கும் பாக்யம் பெற்றுவிடுகிருன்). அம்மா! உலகைக் காக்கும் உன் திருநோக்கு எவன்மீது விழுகின்றதோ அவன் இம்மையிலும் மறுமையிலும் ''தேஹி'' என்ற சொல்லுக்கு ஆளாகாமல் விளங்குகின்றுன். (தேஹி = என்றுல் கொடு என்றும், சரீரமுடையவன் என்றும் பொருள். உன் திருவருள் பெற்றவருக்கு பிறரிடம் யாசகம் கேட்காதவாறு நீ செல்வமளித்துவிடுகிருய். அவ்வாறே மறு பிறவி எடுக்காதவாறு முக்தியும் கொடுத்து விடுகின்றுய் என்பது கருத்து.)

அஷ்ட லக்ஷ்மீக்கள்

இந்த லக்ஷ்மீ ஆதிலக்ஷ்மீ, ஸந்தான லக்ஷ்மீ, கஜ லக்ஷ்மீ, தன லக்ஷ்மீ, தான்ய லக்ஷ்மீ, ராஜ்ய லக்ஷ்மீ, ஸௌபாக்ய லக்ஷ்மீ, வீரலக்ஷ்மீ என்று எட்டு விதமான உருவங்கள் கொண்டு உலகுக்கு அருளுகின்றுள். இவளுடைய திவ்ய மூர்த்தி பேதங்களை இங்கு காண்போம் :—

1. ஆதிலக்ஷ்மீ

वराभयालंकृत पाणिपद्मां पद्मेस्थितां कण्ठधृताब्जमालां ।
पार्श्वद्वये भासुरदीप शक्तिद्वयांचितां नौम्यहमादिलक्ष्मीम् ॥

வரம் அபயம் தாங்கும் திருக்கரத்தினளாய், தாமரை மலர் மாலை அணிந்த கழுத்தினளாய், இரு பக்கங்களிலும் இரு தீபசக்திகளால் அலங்கரிக்கப்பட்டவளாய் தாமரை மலரில் வீற்றிருப்பாள் ஆதிலக்ஷ்மீ.

2. ஸந்தான லக்ஷ்மீ

सन्तानलक्ष्मीं जलपूर्णकुंभखड्गे तथाभीति शिशूकराब्जैः ।
मुदा वहन्तींधृतदीपशक्ति द्वन्द्वोपजुष्टां प्रभजेऽब्जनिष्ठाम् ॥

Koviloor Digital Library

4200
இ25

ஜலம் நிறைந்த குடம், கத்தி, அபயம் சிசு இவைகளை நான்கு கரங்களால் தரித்தவளும், இரண்டு தீப சக்திகளால் அலங்கரிக்கப்பட்டவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஸந்தானலக்ஷ்மீ எனப்படுகின்றாள்.

3. கஜலக்ஷ்மீ

गजश्रियंनौमिकरैस्सरोजे वराभये चापि सदावहन्तीं ।
गजोत्तमाभ्यां जलपूर्णहेमकुंभद्वयेनाप्यभिषिच्यमानाम् ॥

இரண்டு கைகளில் இரு தாமரை மலர்களையும், இரண்டு கைகளில் வராபயங்களையும் தாங்கிக்கொண்டிருப்பவளும், ஜலம் நிறைந்த இரண்டு ஸ்வர்ணகலசங்களால் இரண்டு யானைகளால் அபிஷேகம் செய்விக்கப்படுகின்றவளும் கஜலக்ஷ்மீ எனப்படுவாள். மஹாலக்ஷ்மியின் இருபுறங்களிலுமுள்ள இரண்டு வெள்ளை யானைகளும் அஹங்கார மமகாரங்களாகும். அதன் துதிக்கையில் உள்ள குடங்கள் ப்ரீதி, ஆசை என்பவையாகும் என்று ஸ்ரீ சூக்தத்திற்கு உரைகண்ட வித்யாரண்ய ஸ்வாமிகள் விளக்கம் தந்திருக்கின்றார்கள்.

4. தனலக்ஷ்மீ

शंखं च चक्रं घट पद्मचाप शरान्करण्डं च तथाऽभयं च ।
समुज्वलै : पाणितलैर्दधानां सेवेसुवर्णां धनदां च लक्ष्मीम् ॥

சங்கம் சக்ரம் குடம் தாமரை மலர் வில் அம்பு கூடை அபயம் இவற்றைத் தாங்கும் எண் கரத்தினளும் தங்கம் போன்ற திருமேனியுடையவளும் தனலக்ஷ்மீ என்றழைக்கப்படுகின்றாள்.

5. தான்யலக்ஷ்மீ

वराभये पंकजमिक्षुदण्डं करैश्चतुर्भिर्दधतीमुपासे ।
शाल्यादिसस्यै : कदलीद्रुमैश्चावृतां शुभैर्धान्यकरींश्रियं च ॥

Koviloor Digital Library

வரம் அபயம் தாமரை மலர் கரும்பு இவைகளைத் தரிக்கும் நான்கு திருக்கரமுடையவளும், சம்பாப்பயிர், வாழை மரங்கள் முதலியவற்ருல் சூழப்பட்டவளாயும், தான்யச் செல்வத்தை அளிப்பவளாயும் இருப்பவள் தான்யலக்ஷ்மீ யாவாள்.

6. ராஜ்யலக்ஷ்மீ

चक्रं च शंख वरदाभये च पाशांकुशौ चाप्यसि खेटके च ।
हस्तैर्दधानां नृपरूपरम्यां सिंहासनस्थां विजयांस्मरामि ॥

சக்ரம் சங்கம் வரம் அபயம் பாசம் அங்குசம் கத்தி கேடயம் இவற்றை எட்டுக் கரங்களால் தரிக்கின்றவளும் ராஜ சின்ஹம் உடையவளும், சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவளும், விஜயா என்று பெயர் கொண்டவளும் ராஜ்ய லக்ஷ்மீ என்று அழைக்கப்படுகின்ருள்.

7. ஸௌபாக்யலக்ஷ்மீ

अंभोजयुग्मं वरदाभये च हस्तैर्वहन्तीं गजयुग्मपूज्यां ।
सु शुक्लवस्त्रां कमलासनस्थां सौभाग्यलक्ष्मीं सततंस्मरामि ॥

இரண்டு தாமரை மலர்களையும் வர அபயங்களையும், தாங்குகின்ற நாற்கரத்தினளாய், இரண்டு யானைகளால் பூஜிக்கப் படுகின்றவளாய், வெண்ணிற பட்டாடை தரித்துக் கொண்டிருப்பவளாய், தாமரை மலரில் வீற்றிருப்பவளே ஸௌபாக்ய லக்ஷ்மீயாகும்.

8. வீரலக்ஷ்மீ

वराभये चापशरौ च शंखचक्रे तथा शूलकपालके च ।
हस्तैर्दधानां कनकोज्वलांगीं तां वीरलक्ष्मीं हृदिभावयामि ॥

வரம் அபயம் வில் அம்பு சங்கம் சக்ரம் சூலம் கபாலம் இவற்றைத் தரித்திருப்பவளும், பொன் திகழும் திருமேனியுடையவளும் வீரலக்ஷ்மீ எனப்படுகின்ருள்.

Koviloor Digital Library

மேற்கூறிய இந்த அஷ்டலக்ஷ்மீக்களும் குழந்தைப் பேறு, யானை குதிரை முதலிய வாஹனம், தனம், தான்யம், ராஜ்யம், மங்களம், வெற்றி இவைகளைத் தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அருளுவார்கள்.

ஸ்ரீ:

இந்த மஹாலக்ஷ்மீயை ஸ்ரீ: என்று அழைக்கின்றோம். எல்லோரும் இவளை வந்தடைகின்றனர் என்பதனாலேயே இவளுக்கு ஸ்ரீ: என்று பெயர் வந்தது. ஸ்ரீ என்ற இந்தச் சொல் மங்களத்தைக் குறிக்கின்றது. அதனால் மஹா கவிகள் சிலர் தம் நூல்களின் முதல் சுலோகங்களை மங்கள் சுலோகங்களை இந்த ஸ்ரீயை முதலில் வைத்து பாடத் தொடங்கியிருக்கின்றனர். பாரவீ என்ற மஹாகவி "श्रिय: कुरूणां मधिपस्य पालिनीं" என்றே தொடங்கியிருக்கிறார். இப்படி பல உதாரணங்களைக் காணலாம். மதிப்புமிக்க தேவர்களுக்கும் மனிதருக்கும் அவரவர் பெயருக்கு முன் ஸ்ரீயைச் சேர்த்தே சொல்வது நம் பழக்கமாயிருப்பதிலிருந்தும் இந்த ஸ்ரீ என்ற சொல்லின் பெருமையை அறியலாம்.

गरुडध्वजवल्लभे शुभे गणवर्णादिजदोषशान्तये ।
वरदे तव वाचकं पदं कवय: काव्यमुखे प्रयुंजते ॥

ஹே லக்ஷ்மீயே! கணம் வர்ணம் இவைகளால் நேரிடும் தோஷங்கள் போவதற்கு வரமளிக்கும் அன்னையே! உன் வாசகமான ஸ்ரீ என்ற சொல்லை கவிகள் காவியத்தின் முதலில் உபயோகிக்கின்றனர் என்று லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் சிறப்பித்துரைத்திருக்கின்றார்.

ஸ்ரீ ஸூக்தம்

இப்பெருமைமிக்க ஸ்ரீயுடன் கூடியதாய் லக்ஷ்மீயின் பெருமையை உணர்த்தும் வேதப் பகுதி ஸ்ரீ ஸூக்தம் எனப்படும். ஸ்ரீ ஸூக்தம் என்பது வேதம் என்ற உத்யா

Koviloor Digital Library

னத்தில் பாரிஜாத தரு போன்றது. வாக்குகளுக்கு அப்பாற் பட்ட லக்ஷ்மீயின் பெருமைகளை உணர ஸாதுக்களுக்கு ஸ்ரீ ஸூக்தம் கண்களாய் அமைந்திருக்கின்றது என்கிறார் வேங்கடாத்வரீ என்ற மஹா கவி

वेदोद्याने पारिजातायमानं श्रीसूक्तं तत् जायतां श्रेयसे न : ।
पारे वाचां भासुरेत्वत्प्रभावे चक्षुष्मन्तो देवि येनैव सन्त : ॥

என்ற சுலோகத்தால்.

இந்த ஸ்ரீ ஸூக்தத்தில் லக்ஷ்மீ தன்னைவிட்டு அகலாது எப்போதும் இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப்படு கின்றது. இந்த லக்ஷ்மீயை உபாஸிப்பதற்கான வழியும் அதில் காட்டப்பட்டிருக்கிறது. அக்னியில் திரவியங்களைக் கொண்டு அதற்கான லக்ஷ்மீ மந்த்ரங்களால் ஸ்ரீ தேவியைக் குறித்து வேள்வி செய்வதே அவளை அடையச் சிறந்த வழி என்பதை

हिरण्यवर्णां हरिणीं सुवर्ण रजतस्रजां ।
चन्द्रां हिरण्मयीं लक्ष्मीं जातवेदो म आवह ॥

"ஹே அக்னி பகவானே! பொன் போன்ற மேனியுடைய வளும், பாபங்களை அழிப்பவளும், பொன் வெள்ளியாலான ஆபரணங்களை அணிந்துகொண்டிருப்பவளுமான லக்ஷ்மீயை எனக்கு அருள்வழங்கும்படி இங்கே அழைத் தருளுவீராக" என்பதனால் அறிந்துகொள்ளுகிறோம்.

இந்த லக்ஷ்மீ பொன், பசுக்கள், குதிரைகள், உற்றார் இவர்களை அளிப்பவள்; ரதங்கள், குதிரைகள், யானைகள் புடைசூழ வருபவள்; தான் திருப்தியுடையவளாய் இருந்து கொண்டு பிறரையும் திருப்தி செய்விப்பவள். கீர்த்தி யுள்ளவள், தேவர்களால் சேவிக்கப்படுகின்றவள். உதார குணமுள்ளவள். ஈகாரத்தைத் தன் பீஜாக்ஷரமாகக் கொண்டவள். சூரியன் போன்று ஒளிமிக்கவள், வில்வ விருக்ஷத்தைத் தன் தவத்தினால் உண்டாக்கியவள். நல்ல

Koviloor Digital Library

வாசனையை தன் வருகைக்கு வழியாகக் கொண்டவள். கோமயத்திலும் வாசம் செய்பவள். ஸர்வேசுவரீ, இவள் கர்த்தமரின் பெண். சிக்லீதர் என்பவர் இவள் பிள்ளை. இவள் கருணை மிக்கவள். இந்த ஜகன்மாதா மஹாலக்ஷ்மீ கீர்த்தியையும் செழிப்பையும் அளித்து, பசி, தாகம், தாரித்திரியம் இவைகளைத் தொலைத்து அருள் வழங்க வேண்டும் என்ற விபரங்கள் இந்த ஸ்ரீ ஸூக்தத்தினின்றும் நமக்கு விளங்குகின்றன.

ஸௌபாக்யலக்ஷ்மீ உபநிஷத்

இந்த மஹாலக்ஷ்மீயின் பெருமையை ஸௌபாக்ய லக்ஷ்மீ உபநிஷத் என்ற ஒரு உபநிஷத் அழகாக எடுத்துரைக்கின்றது. இந்த உபநிஷத்தில் ஓமென்ற பிரணவத்தை முன்னும் இடையில் லக்ஷ்மீ நாமாவையும் கடைசியில் நம: என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறி 32 மந்த்ரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

1) ஸ்ரீ:

1)	லக்ஷ்மீ	17)	ஈச்வரீ
2)	வரதா	18)	புக்தி:
3)	விஷ்ணுபத்னி	19)	முக்தி:
4)	வஸுப்ரதா	20)	விபூதி:
5)	ஹிரண்யரூபா	21)	ருத்தி:
6)	ஸ்வர்ணமாலினி	22)	ஸம்ருத்தி:
7)	ரஜதஸ்ரஜா	23)	க்ருஷ்டி:
8)	ஸ்வர்ணப்ரபா	24)	புஷ்டி:
9)	ஸ்வர்ணப்ராகாரா	25)	தனதா
10)	பத்மவாஸிநீ	26)	தனேச்வரீ
11)	பத்மஹஸ்தா	27)	ச்ரத்தா
12)	பத்மப்ரியா	28)	போகினீ
13)	முக்தாலங்காரா	29)	போகதா
14)	சந்த்ரா	30)	தாத்ரீ
15)	சூர்யா	31)	விதாத்ரீ
16)	பில்வப்ரியா (1)	32)	ஸ்ரீ:

இவைகளை ஓம் ஸ்ரீயை நம: ஓம் லக்ஷ்ம்யை நம: என்றவாறு சொல்லிக்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

லக்ஷ்மீ நிலைத்திருக்க

இந்த மஹாலக்ஷ்மீ நிலைத்திருக்க ஸ்ரீ ஸூக்தத்தை எப்போதும் ஜபிக்க வேண்டும். உண்மையையே கூற வேண்டும். கிழக்கு முகமாய் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். முன்பாகவும் பிரியமாகவும் பேசவேண்டும். வஸ்திர மில்லாமல் ஜலத்தில் இறங்கக் கூடாது. எண்ணெ தேய்த்துக்கொண்டு உணவருந்தக் கூடாது. பூமியை வீணுகக் கீறக்கூடாது. பில்வம், தும்பை பூ, தாமரைப் பூ இவைகளைத் தலையில் அணியக்கூடாது, தாண்டவும் கூடாது. தனியாக உப்பு எண்ணெ இவைகளைச் சாப்பிடக்கூடாது. அழுக்குடன் இருக்கக்கூடாது. அழுக்கடைந்த உணவை சாப்பிடவும் கூடாது.

श्रियोमन्त्रं जपेन्मन्त्री श्रीसूक्तानपि संजपेत् ।
भूयसीं श्रियमाकांक्षतू सत्यवादी भवेत्सदा ॥
प्रत्यगाशामुखोऽश्नीयात् स्थित : श्वप्रियं वदेत् ।
नग्नो नावतरेदंभ : तैलाभ्यक्तो न भक्षयेत्
नवृथा विलिखेद्भूमिं न बिल्वं द्रोणमंबुजं ।
धारयेन्मूर्ध्नि नैवाघात् लोणं तैलं च केवलं ।
मलिनो न भवेज्जातु कुत्सितान्नं न भक्षयेत् ॥
द्रोणपंकज बिलवानि पद्भ्यां जातु न लंघयेत् ॥

இத்துடன் செந்தமிழ் எழுதிய ஏடு, வெற்றிலைபாக்கு, திருநீறு, பல்லக்கு, பொன்ஞரம், ஆடை, கன்னி இவ்வெழுவரையும் தன்னை வந்தடைந்தபோது இரு கரங்களாலும் ஏற்கவேண்டும். இது லக்ஷ்மீ தங்க வழியாகும்.

செந்தமிழடைகாய் நீறு சிவிகை பொன்ஞர மாடை
சுந்தரமான தோகை துலங்குமிவ் வகைகளேழும்
வந்தபோதிருகை ஏந்தி வாங்க லக்குமியுஞ்சேர்வாள்
அந்த நாளாகாவென்ருல் அவனைவிட் டகலுவாளே.

Koviloor Digital Library

காலையும் மாலையும் உறங்கக்கூடாது. இரவில் தயிர் சோறு சாப்பிடக்கூடாது. கூடத் தகாதவரோடு கூடக் கூடாது. இஞ்சி, நெல்லிக்காய், கீரை, பாவற்காய், கஞ்சி இவைகளையும் இரவும் சாப்பிடக்கூடாது.

காலை மாலை யுறங்குபவர், காரிகை
கோல மேனி குலைந்தபின் கூடுவர்
சாலி ராத்தயிர் சாதமொ டுண்பவர்
மாலை நேரினும் மாது பிரிவளே.

(மாலை நேரினும் = விஷ்ணுவுக்கு ஒப்பவராயிருப்பினும்)

இஞ்சி நெல்லி இலைக்கறி பாவற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பொஞ்சு பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சி குலாவி நடப்பளே.

இவர்களை லக்ஷ்மீ வந்தடைவாள்

நல்ல வீரம் நிறைந்தவர், சோம்பலற்றவர், தவமுடையவர், பயமற்றவர், ஈகையுடையோர், செல்வத்தை நன்கு அனுபவிப்பவர் இவர்களை நான் அடைகிறேன் என்கிருள் லக்ஷ்மீ.

वीर्यवन्तं त्वनलसं तपस्विन मकातरं ।
दातारं चापि भोक्तारं युक्त्या सेवामि तं नरं ॥

தலை எழுத்தும் துஷ்டக்ரஹங்களும் என் செய்யும்?

இந்த லக்ஷ்மீயின் தியானங்கள் மந்த்ர மஹார்ணவம், சாரதா திலகம் பிரபஞ்சஸாரம், பிரபஞ்ச ஸாரஸாரங்க்ரஹம் முதலிய மந்த்ர சாஸ்திர நூல்களில் நிறையக் கூறப்பட்டிருக்கின்றன. அதற்கான லக்ஷ்மீ மந்த்ரங்கள், பூஜா விதரணங்கள் இவைகளும் விஸ்தாரமாய் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

இவ்வாருன லக்ஷ்மீயை உபாஸித்து அவள் திருநோக்குக்குப் பாத்திரர்களாக நாம் ஆனுல் பிரம்மாவின் தலை எழுத்தும் துஷ்ட கிரஹங்களின் போக்கும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது — லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில்

तिष्ठन्त्वष्टम एव भूतसुतशनि प्रख्याश्च दुष्टाग्रहा :
भाले कामपि लेलिखीतु जगत : स्रष्टा पि कष्टां दशां ।
ते किं कुर्युरपांगतो मयि सकृत् देवित्वयांगीकृते
नीहारो न करस्थमंबरमणे : लीलांबुजं बाधते ॥

ஹே மஹாலக்ஷ்மி! உன் கடாக்ஷத்திற்கு நான் பாத்திரமாகி விட்டால் செவ்வாய் சனி முதலிய துஷ்ட க்ரஹங்கள் அஷ்டமத்தில் இருப்பதாலோ, சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவன் கஷ்ட தசையை நெற்றியில் எழுதியதாலோ எனக்கு என்ன நேர்ந்துவிடும்? சூரியனின் திருக்கரத்தில் விளங்கும் தாமரைப் பூவை பனியால் அழிக்க முடியுமா? என்ன! என்கிருர் மஹாகவி. திருஷ்டாந்தத்தோடு கூறும் உறுதியான வார்த்தை.

கனகதாராஸ்தவம்

ஆதி சங்கர பகவத் பாதாள் ஸ்ரீ லக்ஷ்மீயை ஸ்தோத்திரம் செய்து ஏழையின் வீட்டில் பொன்னெல்லிக்கனிகளை மழையாக கொட்டச் செய்ததும் இங்கு நினைத்தற்குறியது. சங்கராசாரியாள் குழந்தைப் பருவத்தில் பிக்ஷா சரணம் செய்கிருர். ஒரு ஏழையின் வீட்டில் பிக்ஷை கேட்கின்ருர். வீட்டுக்காரியான அம்மாள், தம்மில்லாமை நினைத்து வருந்துகின்ருள்.

विधिनाखलु कंचितावयं वितरीतुं वटवे न शक्नुम :

தெய்வம் நமக்குப் பொருளை அருளவில்லை! இந்த பிரம்மசாரிக்கு பிக்ஷையிடமுடியாத தௌர்பாக்யம் நேர்ந்துவிட்டதே என் செய்வது என்று கண்ணீர் வடிக்கின்ருள். மனமிருப்பவரிடம் பொருளில்லை. பொருளுள்ளவரிடம்

Koviloor Digital Library

மனமில்லை. இது உலகின் இயற்கை. மனம் நொந்து பரிதவிக்கும் அந்த ஸ்திரீயைக் கண்டு கருணைகொள்கிறார். முன் ஜன்மாவில் பிறருக்கு தானம் செய்யாதவருக்கும் புண்ணியமில்லாதவர்க்கும் இந்த ஜன்மாவில் தனமளிக்க மாட்டாள் லக்ஷ்மீ. ஆகவே சங்கரர் ஒரு முடிவுக்கு வருகிறார். அம்மா இருப்பதைப் போடுங்கள் என்றார். அவளும் ஒரு நெல்லிக்கனியை ஆச்சார்யாளின் பாத்திரத்தில் இடுகின்றாள்.

इति तद्वचनं स शुश्रवान्
निजगादांब मयीद मर्पितं ।
फलमंब ददस्व तत्फलं
दयनीयो यदि ते हमंबिके ॥ என்றபடி

ஸ்ரீ மஹாலக்ஷ்மீயை நோக்கி, ஜகன்மாதா! இவள் எனக்கு பிக்ஷையிட்டிருக்கின்றாள். இந்தப் புண்ணியத்திற்கு இப்போது பலனாக நீ இவளுக்குப் பொருள் அளிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டு மனமுருகப் பாடுகின்றார்.

अंगं हरे : पुलकभूषणमाश्रयन्ती
भृंगांगनेन वकुलाभरणं तमालं ।
अंगीकृताखिलविभूतिरपांगलीला
मांगल्यदास्तु मम मंगलदेवताया : ॥ என்று

உடன் பொன் மயமான நெல்லிக்கனிகளாய் வீடு நிரம்புகின்றது. பொன் நெல்லிக்கனிகளாய் அன்னை பொழிந்த காரணத்தால் ஆசாரியாள் இயற்றிய அந்த ஸ்தோத்திரத்திற்கு "கனகதாராஸ்தவம்" என்ற பெயர் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி ஸந்நியாஸிகளுக்கு சிறிது பொருள் அளித்தாலும் அளித்தவர்களுக்கு எவ்வளவு புண்ணியத்தைக் கொடுக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டு.

Koviloor Digital Library

ஆகவே பிரமன் தலையில் எழுதியதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம் லக்ஷ்மீ தன்னைப் பிரார்த்திப்பவர்களுக்கு நிச்சயம் அருளுவாள். "ஸ்ரீ க்ஷய" என்று பிரமன் தலையில் எழுதியிருந்தாலும் லக்ஷ்மீ கடாக்ஷம் அதை "யக்ஷ ஸ்ரீ"யாக மாற்றி விடுமே!

(ஸ்ரீ க்ஷய: என்றால் ஐசுவரிய நாசம் என்று பொருள். அதையே திருப்பி படித்தால் யக்ஷ ஸ்ரீ என்று ஆகும். யக்ஷ ஸ்ரீ என்றால் குபேர ஸம்பத் என்று பொருள். இவ்வாறு லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது)

"அமுதக் கடலிடை அமர்ந்த லக்ஷ்மீ"

இந்த மஹாலக்ஷ்மீ அமிர்தக் கடலின் நடுவில் தேவ விருக்ஷங்களாகிய கல்பதரு, பாரிஜாதம் முதலிய விருக்ஷங் களின் நடுவில் மிக அழகிய மணிமயமான மண்டபத்தில் சிறப்பு மிக்க ரத்ன ஸிம்மாஸனத்தில் தாமரை மலரின்மீது அமர்ந்திருப்பாள். அன்னையைச் சுற்றிலும் தேவலோகத்து அழகிகள் சேவித்து நிற்பர்.

இவள் உலகங்களை அளித்த அன்னை. இவளே வெற்றி தருபவள் என்கிறது லக்ஷ்மீ ஸஹஸ்ரம்.

सुधोदधिसमुल्लसत्सुरतरु छटान्तर्गते
मनोजमणिमण्टपे महति रत्नसिंहासने ।
स्थितां मणि सरोरुहे त्रिदशसुन्दरी सेवितां
जयाय भवतीमहं जननि सं तं चि तये ॥

இந்த ஜகன்மாதாவின் தியானத்தைப் பலவிதமாகக் கூறும் மந்த்ர சாஸ்திரங்கள். ஸௌபாக்ய லக்ஷ்மீ உப நிஷத்துக் காட்டும் கோல மேனியை இங்கு காண்பாம்.—

भू याभ्द्‌यो द्विपद्माऽभयवरदकरा तप्तकार्तस्वराभा
शुभ्राभ्राभेभ युग्मद्वयकरधृतकुंभाभ्दिरासिच्यमाना ।
रत्नौघाबद्धमौलि : विमलतरदुकूलार्तवालेपनाढया
पद्माक्षी पद्मनाभोरसि कृतवसति : पद्मगात्री : श्रियै न : ॥

Koviloor Digital Library

இரண்டு தாமரை மலர்களையும் அபயவர முத்திரைகளையும் தாங்கும் நான்கு திருக்கரங்கள் கொண்டவளும், உருக்கிய பொன் போன்ற நிறமுள்ளவளும், வெளுத்த இரு யானை களுடைய துதிக்கையிலுள்ள குடங்களால் அபிஷேகம் செய்விக்கப்படுகின்றவளும், ரத்னங்கள் பதித்த கிரீட முள்ளவளும், தூய பட்டாடை தரித்தவளும், சென்னிற பூச்சுடையவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளும், தாமரை மலர்போன்ற கண்கள் உள்ளவளும், மகாவிஷ்ணு வின் மார்பில் உறைபவளுமாகிய மஹாலக்ஷ்மீ நமக்கு ஐசுவர்யத்தை அளிக்கட்டும் ''

லக்ஷ்மீ ஸ்வயம்வரம்

विष्णो : सामर्थ्यरूपत्वात् विष्णुशक्ति : प्रगीयते என்று இந்த மஹாலக்ஷ்மீ விஷ்ணு சக்தியாகப் போற்றப் படுகின்றாள். இந்த லக்ஷ்மீயின் திருவருள் கிடைத்தால் தான் விஷ்ணுவின் திருவருள் நமக்குக் கிடைக்கும். இந்த லக்ஷ்மீயை புருஷகாரம் என்று உரைப்போர் பெரியோர்.

लक्ष्म्या सहहृषीकेश : देव्याकारणरूपया ।
रक्षक : सर्वसिद्धान्ते वेदान्तेषु च गीयते ॥ என்றபடி பக்தனுக்கு அருள் புரியும்படி பகவானை இவளே தூண்டு கின்றாள்.

முன்னொரு ஸமயம் விஷ்ணுவும் சிவனும் ஹாலாஹலர் என்ற அஸுரர்களைக் கொன்றுவிட்டு தம்மிருப்பிடம் வந்தனர். லக்ஷ்மீயிடமும் பார்வதியிடமும் அகந்தை யோடும் பேசினர். லக்ஷ்மியும் பார்வதியும் இதைக்கேட்டு குறும்பாகச் சிரித்தனர். அதனால் கோபமடைந்த இரு வரும் இரு சக்திகளையும் அலக்ஷியமாய் பேசினர். இதனால் கோபமடைந்த லக்ஷ்மீயும் பார்வதியும் இருவரையும் விட்டுச் சென்றுவிட்டனர். அதனால் இருவரும் சக்தி யிழந்தனர்.

Koviloor Digital Library

निस्तेजस्कौ च निश्शक्तौ विक्षिप्तौ च विचेतनौ ।

अक्रभाना त्तयो : शक्त्यो : जातौ हरि हरौ तदा ॥ அதனால் தத்தம் வேலைகளை சரியாய் செய்யமுடியாது சக்தியற்றிருந்தனர்.

இதனால் அசுரர் பலம் பெற்றனர். தேவ ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டு அரசியற்றினர். தேவர்கள் ராஜ்யமிழந்து துயருற்றனர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மஹாலக்ஷ்மீ மீண்டும் திருப்பாற்கடலில் தோன்றி விஷ்ணுவை பர்த்தாவாய் ஏற்றருளுகிறேன் என்று அருளினாள். அதன் காரணமாக விஷ்ணுவின் யோசனைப்படி தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி மந்தர மலையை மத்தாக்கி, வாசுகியை கடைகயிராக்கி, திருப்பாற்கடல் கடைந்தனர்.

திருப்பாற்கடல் கடையும்போது ஜகன்மாதா ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தேவர்களைக்காக்கத் திருவுள்ளங்கொண்டு திருப்பாற்கடலினின்றும் தோன்றினாள். ஸகல குணங்களும் நிறைந்தவரும், அழகின் திருவுருவமானவரும் வேத வேத்யனாயும் உள்ள பரமபுருஷனும் புருஷோத்தமனாகிய ஸ்ரீமந் நாராயணனைத் தன் பதியாக வரித்து அனைவருக்கும் முன்னிலையில் அவர் கழுத்தில் மலர்மாலையை அணிவித்து திருவருள் புரிந்தாள்.

निशाकरश्च सा देवी भ्रातरौ द्वौ पयोनिधे : ।

उत्पन्न माश्रौ तावास्तां शिवकेशवसंश्रितौ ॥

(லக்ஷ்மீ ஸஹஸ்ர நாமம்)

பின்னர் விஷ்ணு லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற காரணத்தால் சக்தி பெற்று விளங்கினார். ஜகன்மாதா லக்ஷ்மீயின் கடாக்ஷம் தேவர்களுக்கும் கிட்டியது. அதனால் தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்தது. அசுரரோடு யுத்தத்தில் வெற்றியும் கிடைத்தது. மூவுலக ராஜ்யமும் கிடைத்தது. லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவருக்குக் கிடைக்காததும் உண்டோ!

Koviloor Digital Library

சிறப்பு நிகழ்ச்சி

இந்த ஹோமம் ஸ்ரீ புவனேசுவரீ ஸந்நிதானத்தில் நடப்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சி. இந்த புவனேசுவரீ ஆதிசக்தி என்றும் ஸம்வித்ரூபிணீ என்றும் போற்றப் படுகின்ருள். "आद्यां विद्यां च धीमहि" என்றும் தேவீ பாகவதம் கூறுகின்றது. இவளுடைய பீஜாக்ஷரம் ஹ்ரீங்காரமாகும். இதையே மாயா பீஜம் என்றும் கூறுவர்.

இந்த புவனேசுவரீயின் மந்த்ரம் துர்காஸூக்தத்தி னின்றும் கிடைத்திருக்கிறது. இதையே சாக்தப்பிரணவம் என்றும் கூறுவர். இந்த ஹ்ரீங்காரம் தேவீ சப்தசதீ முதல் சுலோகத்திலும் ரஹஸ்யமாய் கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறே ஸ்ரீ ஸூக்தத்திலும் ஹ்ரீங்காரத்தின் குறிப்பைக் காண முடிகின்றது.

இந்த புவனேசுவரீ ராத்திரி ஸூக்தத்தின் தேவதை யாள் விளங்குகின்ருள். இவளே உலகத்தின் ஆதிசக்தி என்றும் ஸ்ருஷ்டி செய்பவள் என்றும் தெரிகின்றது.

ஸ்வாமிகளின் சமயப்பணி

இந்த பராசக்தியை புதுக்கோட்டையில் பிரதிஷ்டை செய்து உலகம் வாழ வழிசெய்து கொடுத்த மஹான் ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் என்பது உலகமறிந்த விஷயம்.

இவர்கள் புவனேசுவரியின் பெருமை மந்த்ரங்கள் புஜா கல்பம் எல்லாவற்றையும் பக்தர்கள் தெரிந்துகொண்டு பாக்யம் பெறவேண்டும் என்று எண்ணினர்கள்.

"புவனேசுவரீ தத்வப்ரகாசம்"

அதன் விளைவுதான் புவனேசுவரீ தத்வப்ரகாசம், என்ற நூல். இப் பெருநூலில் "புவனேசுவரீ மந்த்ர ப்ரகாசம், ஸ்ரீ புவனேச்வரீ யந்த்ரப்ரகாசம், புவனேசுவரீ ஸ்துதிப்ரகாசம், புவனேச்வரீ கதாப்ரகாசம், புவனேச்வரீ

Koviloor Digital Library

பூஜாப்ரகாசம் என்ற ஐந்து பகுதிகள் கொண்டது. த்ரிகுணித யந்த்ரம், ஷட்குணித யந்த்ரம், த்வாதச குணித யந்த்ரம், கடார்கள யந்த்ரம் முதலிய 14 யந்த்ரங்கள் சாஸ்திர முறைப்படி பூர்ணமான அங்கங் களுடன் வரையப்பட்டு இதில் இணைக்கப் பெற்றிருக் கின்றன. இதில் விசேஷமாய் கடார்களம் என்ற யந்த்ரம் எல்லா பலனையும் அளிக்கவல்லது.

இது சாதகர்களுக்கு மந்த்ர சாஸ்திரம் அளித்த பரிசு என்றே பகவத்பாதர் அவர்கள் குறித்திருக்கின்றனர்.

இந்த நூலை உருவாக்கி பக்தர்களுக்கு அளிக்குமாறு ஸ்வாமிகள் என்னை ஆக்ஞாபித்தார்கள். இதை ஸ்ரீ புவனேசுவரீயின் கட்டளையாகவே கொண்டு ஸ்வாமி களின் அருளாசியும் ஜகன்மாதாவின் திருவருளும் துணை கொண்டு சற்றேறக்குறைய நான்கு வருஷங்கள் முயற் சித்து சுமாராக 70 நூல்களின் துணையுடன் தமிழில், தமிழில் ஸம்ஸ்கிருத சுலோகங்களின் குறிப்புகளுடன் எழுதி முடித்திருக்கிறேன்.

இந்நூல் அண்மையில் ஸத்குரு ஸ்வாமிகளின் அதிஷ் டான வெளியீடாய் வெளிவர விருக்கிறது. அச்சிட பல ஆயிரம் ரூபாய்கள் தேவைப்படுகின்றது. புவனேசுவரீ யின் பெருமையைத் தாங்கிவரும் இந்நூலை பெற பாக்கிய முள்ளவர்கள் முன்கூட்டியே தன் பெயரைப் பதிவு செய்து கொள்வது நலம். இதற்கான விபரங்களை இந்த இரண்டு விலாஸங்களிலும் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

(1) ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்,
அதிஷ்டானம், புவனேசுவரீ நகர்,
புதுக்கோட்டை—1.

(2) ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் ஸ்கந்தாசிரமம்,
ஸ்கந்தகிரி, உடையாப்பட்டி,
சேலம்—3.

Koviloor Digital Library

ஸ்ரீ ஸ்வாமிகள் திருப்பணி

இவ்வாறு ஸ்வாமிகளின் பணிகளில் மிகச் சிறப்பான பணியொன்று சேலம் உடையாப்பட்டிக்குப் பக்கத்தில் உள்ள ஸ்கந்தகிரியில் நடக்கிறது. அங்கே ஸ்கந்தாச்ரமம் நிறுவி அதில் ஸ்ரீ தண்டபாணியை பிரதிஷ்டை செய்து அண்மையில் கும்பாபிஷேகம் செய்ய நிச்சயம் செய்திருக் கின்ருர்கள். அதுவும் முருகன் திருவருளால் செவ்வனே நடைபெறும்.

ஸ்ரீ ஸ்வாமிகள் சிறுவயதிலேயே வைராக்யம்கொண்டு அவதூதரானவர். அவரை ஆட்கொண்ட தெய்வம் ஸ்ரீ தண்டபாணியாவார். அவர் குன்றுதோறும் ஆடல் புரியும் குமரவேள் குடிகொண்ட குன்றுகளில் பல்லாண்டுகள் தங்கியிருக்கின்ருர்கள். முருகன் ஸாந்நித்தியம் பெற்ற பல க்ஷேத்திரங்களில் தங்கி அவன் அருளுக்குத் தவம் கிடந் திருக்கின்ருர்கள். அவ்வாறிருக்க ஸ்ரீ புவனேசுவரீ மாதா அவர்களைத் தடுத்தாட்கொண்டதுதான் வியப்பிற்குரிய விஷயம்.

இருப்பினும் தண்டபாணி அவரை தன் வசப்படுத்தி யிருக்கிருர். ஒருநாள் இரவு ஸ்வாமிகள் கனவு காண்கிருர். அது அவருக்குக் கனவாயிருக்கலாம். அந்த நிகழ்ச்சியை ஸ்வாமிகள் நமக்குக் கூறும்போது அவருடைய கண்கள் முருகன் திருவருளை நினைத்து ஆனந்தபாஷ்யத்தைச் சொறிகின்றன. உடல் புளகாங்கிதமடைகிறது. அவர் நா முருகன் பெயரை ஆர்வத்தோடு உரைக்கின்றது.

கனவில் தண்டபாணி ஸ்வாமிகளுக்கு தர்சனம் அளிக் கிருர். ஒரு மலை தெரிகிறது. அதில் ஒரு ஜோதி பிரகாசிக் கின்றது. அதில் தெரிகின்றது தண்டபாணியின் திவ்ய மங்கள ரூபம். என்பணி தொடங்கு என்பதுதான் முருகன் கூறிய வார்த்தை.

மறுநாள் காலையில் ஒரு பக்தர் (புதுக்கோட்டைக் காரர்) ஒரு தண்டபாணி விக்ரஹத்தைக் கொண்டுவந்து


Koviloor Digital Library

ஸ்வாமிகளிடம் கொடுக்கின்ருர். சேலத்திலிருந்து ஒரு பேரன்பர் ஒரு மலைக்கு ஸ்வாமிகளை அழைத்துச் செல்லுகிருர். ஸ்வாமிகள் கனவிலே தோன்றிய அதே மலை. அது ஸ்வாமிகளுக்கு முருகன் திருவருளால் கிடைத்திருக்கின்றது.

ஸ்வாமிகள் அங்கு ஒரு ஆசிரமம் கட்டியிருக்கின்ருர்கள். வேதம் உணர்த்தும் பரம்பொருளான முருகனை வழிபட சிறந்த மார்க்கம் வேதரக்ஷணம் என்று நினைத்து ஒரு வேத பாடசாலை அங்கே அமைத்து விட்டார்கள். அதற்கு ஸ்கந்தாசிரம வேதபாடசாலை என்று பெயர். மாணுக்கர்கள் வேதம் முழக்கம் அழகாய் கேட்கின்றது.

வானளாவிய மலைகள் நாற்புறமும் பரந்துகிடக்கின்றன. இடையில் ஸ்கந்தகிரி. பக்கத்தில் கன்னிமார் நதியின் தெளிந்த ஜலம் வற்ருது ஓடுகின்றது. சாந்தியும் தெய்வ நம்பிக்கையும் தானுகவே பிறக்கும் உன்னதமான இடம். மக்கள் தர்சனத்திற்காக நித்தம் வருகின்றனர். அதை தரிசிக்கும் பேறு எனக்கும் கிடைத்தது.

ஸ்வாமிகள் இருக்கும் இடத்தில் கூட்டத்திற்குக் குறைவில்லை. ஸ்வாமிகளுக்கு ஸ்வப்பனத்தில் தோன்றியபடி ஜோதி தர்சனம் திரு அண்ணுமலை தீபத்தன்று இன்றும் நடக்கின்றது. இனி வருவது நான்காவது ஜோதி தர்சனமாகும். இந்த ஸ்கந்தகிரியில் உள்ள ஸ்கந்தாசிரமத்தில் உள்ள தண்டபாணியை தரிசித்து பேரருள் பெற வேண்டுகின்றேன். ஸ்கந்தாசிரமம் சேலத்தில் ஆத்தூர் ரோட்டில் உள்ள உடையாப்பட்டி என்ற சிற்றூரில் இருக்கிறது.



விலாசம் :

ஸ்கந்தாசிரமம்,
ஸ்கந்தகிரி,
உடையார்ப்பட்டி,
சேலம்—8.

———

Koviloor Digital Library

Koviloor Digital Library